விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 059 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 04 வெள்ளிக்கிழமை (16.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு இடைக்காலத் தடை

## யாழ்., திருகோணமலை நீதிமன்றங்கள் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலையில் நடத்துவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை நீதிமன்றங்கள் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.**

எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கை தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டை நடத்த தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம், தேசிய மாநாட்டை நடத்த நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவை சேர்ந்த பீற்றர் இளஞ்செழியன் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பான மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

தேசிய மாநாடு நடத்துவதாயின், 21 நாட்களுக்கு 16

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi
ඉලංකෛයි තමිල් අරසු කච්චි

## தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தர்மமே மறுபடியும் வெல்லும்!

Shritharan Sivagnanam
4 hours ago
தர்மத்தின் வாழ்வு தன்னை
சூது கவ்வும்
தர்மமே மறுபடியும் வெல்லும்!
187 39 23

### தமிழரசுக் கட்சி மாநாட்டுக்கான நீதிமன்ற தடை தொடர்பில் சிறீதரன் எம்.பியின் பதிவு

(யாழ்ப்பாணம்)

"தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தர்மமே மறுபடியும் வெல்லும்" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் பதிவொன்றை 15

## தமிழரசுக் கட்சிக்காக நீதிமன்றில் வாதாடுவேன்

### சுமந்திரன் எம்.பி




(கொழும்பு)

தமிழரசுக் கட்சிக்காக நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடுவேன் என சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 15

## தேர்தலை அறிவியுங்கள் வேட்பாளரை கூறுவோம்

### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தல் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம் என 15

## மக்களின் வளமான வாழ்க்கைக்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைக

### ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு



(கொழும்பு)

பொது மக்களின் வளமான வாழ்க்கைத் தரத்துக்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் நேற்று ஜனாதி 15

## பாதுகாப்பான புகையிரத கடவையை வலியுறுத்தி

### இணுவிலில் ரயிலை மறித்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் பாதுகாப்பான புகையிரத கடவையை வலி 15

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு சில அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்படும் என லங்கா சதொச 15

## ஐஸ்கிறீமுக்குள் தவளை விசாரணை ஆரம்பம்

### யாழில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் குளிர்களி (ஐஸ் கிறீம்) விற்பனை நிலையம் ஒன்றில் விற்கப்பட்ட குளிர்களியில் தவளை ஒன்று காணப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்களி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தற்காலிகக் கடவுச்சீட்டு சாந்தனுக்கு வழங்கப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட சாந்தன் இந்தியாவில் இருந்து வெளியேறுவதற்கு மாத்திரம் தற்காலிக கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகத்தினால் குறித்த கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

32 வருடகால சிறை தண்டனைக்கு பின்னர், சாந்தன் நாடு திரும்புவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தேர்தலுக்கான ஆதரவு குறித்து தீர்மானம் இல்லை

### சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

"ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்க தாம் இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளிவந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)




தோற்றம் : 26.10.1929 மறைவு : 18.01.2024

### திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

கடந்த 18.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (15.02.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (17.02.2024) சனிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவிபுரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற பொழுதெல்லாம் வைத்திய சிகிச்சைகளையும் பராமரிப்பினையும் வழங்கிய யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஈ.சரவணபவன் (மகன்)**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் (2010-2020)
உதயன் குழுமத் தலைவர்
**105, இராஜ வீதி, கோப்பாய், யாழ்ப்பாணம்.**
T.P:071 411 5002, 071 411 5000

**ஈஸ்வரபாதம் குடும்பத்தினர்.**

(C-8363)

## அமைச்சர் டிரான் அலஸ் வடக்கிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டோர் இந்தவாரம் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் எதிர்வரும் 17 ம் திகதியும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் எதிர்வரும் 18 ம் திகதியும் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பங்கேற்பதாக இவ்விஜயம் அமையவுள்ளது.

இதன்போது சிவில் சமூக குழுக்கள், வர்த்தக சமூகத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அமைச்சர் டிரான் அலஸ் சந்தித்து பேசவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில் 73 பாடசாலைகள் விமானப்படையால் அபிவிருத்தி

(கொழும்பு)

விமானப் படையால் வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 73 பாடசாலைகள் அபிவிருத்தி மற்றும் புனரமைக்கப்படவுள்ளது.

இலங்கை விமானப் படையின் 73வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கில் தொடர்ச்சியான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் அடுத்த மாதம் 2ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அதன் ஒரு பகுதியாக வட மாகாணத்தைமையமாகக்கொண்டு, 125 மில்லியனுக்கும் அதிகமான நிதியுடன் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள 73 பாடசாலைகள் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும், 25 மில்லியன் ரூபாவில் பாடசாலைகளுக்கு 73,000 பாடசாலை புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

மேலும் குறித்த வேலைத்திட்டங்களுக்கு அரச நிதி பயன்படுத்தப்படாது என தெரிவித்த விமானப்படைத் தளபதி நிதியுதவி நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் எனவும் கூறியுள்ளார். (ம-7)


## அண்மையில் பட்டம்பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்




வாழ்த்துவோர் :-
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

(19134)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் சுமார் 300 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழப்பு

## மஹறகம வைத்தியசாலை தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வருடாந்தம் 250 முதல் 300 புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உயிரிழப்பதாக மஹறகம வைத்தியசாலையின் சிறுவர் புற்றுநோய் வைத்திய நிபுணர் சஞ்சீவ குணசேகர தெரிவித்துள்ளார்.**

சிறுவர் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் 2021ஆம் ஆண்டில் 578 ஆண் குழந்தைகளும் 454 பெண் குழந்தைகளும் பதிவாகியுள்ளதாக தெரிவித்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பது மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரத்தப் புற்றுநோயானது சிறுவர்களிடையே மிகவும் பொதுவான வகை புற்றுநோயாகும்.

மேலும், புகைப்பிடித்தல் மற்றும் வெற்றிலை உண்பது பெரியவர்களுக்கு புற்றுநோய் வருவதற்கு முக்கிய காரணம் என்றும் ஆனால் குழந்தைப் பருவத்தில் புற்றுநோய் ஏற்படுவதற்கு இதுபோன்ற குறிப்பிட்ட காரணம் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வருடத்திற்கு 1,000 முதல் 1,200 குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(நி-5-6)

### குற்றம் சுமத்தப்பட்டுள்ள 25 இலங்கையர்களை நாடு கடத்தும் மாலைதீவு

(மாலைதீவு)

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 25 இலங்கையர்கள் உட்பட 186 வெளிநாட்டவர்களை நாடு கடத்துவதற்கு மாலைதீவு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வீசா மீறல் மற்றும் போதைப் பொருள் குற்றங்களில் ஈடுபட்ட குழுவொன்றே நாடு கடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

25 இலங்கையர்களுக்கு மேலதிகமாக, 83 பங்களாதேஷ் பிரஜைகள், 46 இந்திய பிரஜைகள் மற்றும் 8 நேபாள பிரஜைகள் நாடு கடத்தப்படவுள்ளவர்களில் அடங்குவர்.

எவ்வாறாயினும்,' குறித்த வெளிநாட்டினரை நாடு கடத்துவதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

### இலங்கையில் காதலர் தினத்தில் 1200 கோடி ரூபாவிற்கு ரோஜா பூக்கள் விற்பனை



(கொழும்பு)

இலங்கையில் காதலர் தினத்தில் சுமார் இரண்டு மில்லியன் ரோஜா பூக்கள் விற்பனை செய்யப்பட்டதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு ரோஜா பூ விற்பனை நூற்றுக்கு நூறு வீதம் அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் மலர் விற்பனை நிலையங்களில் சிவப்பு ரோஜா உள்ளிட்ட பல்வேறு ரோஜா மலர்கள் கடந்த 13ஆம் திகதி மாலையிலிருந்து விற்பனை செய்யப்பட்டதாகவும் ரோஜா பூக்களுக்கு அதிக அளவு கிராக்கி காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனி ஒரு ரோஜா மலர் 300 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டதாகவும் ரோஜா மலர் கொத்து 3000 முதல் 6000 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரோஜாப்பூ விற்பனையில் சுமார் 1200 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)


## யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்

## தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு -2023





ஐ.கவிஸ்கா-184



செ.கரிஷ்-179



மி.ருஷான்-169



மோ.ஐனோஷன்-160



ஐ.போஷித்ஜயன்-157



ச.அட்சயன்-156



பி.சாய்சஞ்ஜெய்-155



ஜோ.ஆகீஸ்-154



செ.சஞ்சீவ்-150



**100 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள்**

செ.மகீபன்-143, ம.ஜஸ்வின்-143, ற.கஸ்மிதா-142, கே.ரிஷிகேசிகா-138, ர.திவிஷா-136, ச.கிருத்திகா-134, சி.சுலக்சனா-132, வி.லுக்சிகன்-131, சி.மதுஷங்கர்-128, பு.கம்சிஜா-128, அ.அஸ்விதா-126, ஞா.கியாழினி-125, கா.லதுமிதன்-125, அ.சாத்விகன்-124, வா.சாயிசர்மி-122, சி.கபிஷன்-120, பி.லதுமிதா-117, கு.பவிராஜ்-116, நி.கனிஸ்கா-116, ஸ்ரீ.மகிஷனா-115, ச.கீர்த்திகா-114, வ.லதுஷிகா-111, வி.தேனுஜா-107, த.பிரவின்-106, ர.கவின்-103, ப.வர்மியன்-102, ஜெ.ஷர்வின்-101, மோ.சபரிஷா-100

எமது பாடசாலையில் இருந்து 65 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 91 வீதமான மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர் திரு.யோ.ஜெகஆனந்தம் அவர்களையும் பிரதி அதிபர் திருமதி.ஜெ.விமலன் அவர்களையும் ஆசிரியர்கள் திருமதி.டோ.கல்கி, செல்வி.மு.கிருஸ்ணபாமினி மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(19114)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## உதய சூரியன் உதைபந்தாட்டம்

## சம்பியனான லைட்னிங்



வடமராட்சி கிழக்கு உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் லைட்னிங் போய்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் ஆட்டத்தில் ஈஸ்டன் கிங்ஸ் அணியை எதிர்த்து லைட்னிங் போய்ஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடை பெற்ற இறுதிபோட்டியின் முடிவில் லைட்னிங் போய்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உதய சூரியன் உள்ளூர் போட்டிக்கான கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1 ஆம் மற்றும் 2 ஆம் இடத்திற்கான கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட அணியினருக்கு பணப் பரிசில்களும், வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-60)

## ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றியது இலங்கை

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி வெள்ளையடிப்பு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட், 3 ஒரு நாள் மற்றும் 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை இலங்கை அணி கைப்பற்றிய நிலையில் அடுத்து நடைபெறும் ஒரு நாள் தொடரில் இலங்கை அணி 2-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் 48.2 ஓவர்களில் 266 ரன்களுக்கு ஓல் அவுட் ஆனது. ரஹ்மத் 65 ரன், ஓமர்சாய் 54 ரன் எடுத்தனர். குர்பாஸ் 48 ரன்னிலும், அலிகில் 32 ரன்னிலும் அவுட் ஆகினர்.

இதையடுத்து, 267 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் பதும் நிசங்கா , அவிஷ்கா பெர்னாண்டோ முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 173 ரன்கள் சேர்த்த நிலையில், அவிஷ்கா பெர்னாண்டோ 91 ரன்னில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய பதும் நிசங்கா சதமடித்து அசத்தி' 118 ரன்னிலும் குசால் மெண்டிஸ் 40 ரன்னில் வெளியேறினர்.

இறுதியில், இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 267 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இலங்கை அணி ஒருநாள் தொடரில் ஆப்கானிஸ்தானை 3-0 என வெள்ளையடிப்பு செய்தது. ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது பதும் நிசங்காவுக்கு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3042

நர்மதா




நிரோஜன்




வதிரிஷா




வைசாலி




சுகந்தன்




தாருகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கிளி. ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராய்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண பிரதம செயலாளர் ஆளுநர் சமன் பந்துலசேன ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக மாவட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள், அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டன. அதேவேளை காணி, விவசாயம், நீர்வழங்கல், வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, கூட்டுறவு, வாழ்வாதாரம், நன்நீர் மீன்பிடி, கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து உட்பட அனைத்து துறைசார் விடயங்களும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வடமாகாண அமைச்சு சார்ந்த திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்கள், இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாவட்ட திணைக்களங்கள் சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

(நி-5-6-100-315-316)


## வாணி ரெக்ஸ்

**விசேட விலைக் கழிவுகள்**

வேக்கிங் விசா/ விசிற்றிங் விசா மூலம் கனடா அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு செல்வபவரா நீங்கள் அந்த நாட்டு காலநிலைக்கேற்றதான அனைத்து விதமான...



+ Jacket (ஆண்/பெண்/சிறுவர்கள்)
+ Sweatter வகைகள்
+ Cap/மௌப்ளர் வகைகள்
+ பிளாங்கற் வகைகள்
+ Luggage Bag அனைத்து அளவுகள்
+ கை குளோஸ்
+ Ear மௌப்ளர்
+ உள் T.Shirt
+ Neck மௌப்ளர்
+ பெலிட்

மேலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் நுளம்பு வலை போன்றவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்


(C-8358)

வாணி ரெக்ஸ்

No-81, Grand Bazaar Jaffna,

021 222 5578 / 021 222 9286 / 077 748 8093


## நீங்காத நினைவுகளில்



திதி: பூர்வபட்ச சப்தமி
2024.02.16

**ஆண்டுகள் ஐந்து**

அமரர்.
**செல்லப்பா சதானந்தன் J.P**
(ஓய்வுநிலை அதிபர்)

தோற்றம்: 23.07.1940
மறைவு: 13.03.2019

ஆண்டுகள் ஐந்து ஆன போதும்
மீண்டு நீங்கள் வருவீர்களென்றே
பாசத்தோடு பார்த்திருக்கிறோம் அப்பா!
ஆலடியான் பாதமலர் தினம் பணிந்தே

"ஆனந்த பவன்"
அல்வாய்.

(சி-8357)

குடும்பத்தினர்.

# இராசிபலன்

16.02.2024
மாசி 04, வெள்ளிக்கிழமை
சப்தமி பிற்பகல் 3.08 மணிவரை

பரணி பிற்பகல் 2.37 மணிவரை
சுபநேரம் 6.33-8.03 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்.

**வளவன்**

**மேஷம்** — குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — மறைமுக எதிர்ப்புகள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கன்னி** — மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், பொதுநலனில் அதிக அக்கறை கூடும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**விருச்சிகம்** — பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதூரியமாகச் செயற்பட்டு பொருள் வருவாயைப் பெருக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் நன்மையுண்டு.

**மகரம்** — வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** — பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌரவமான நாள்.

**மீனம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

ஒரு[illegible] வாழ்க்கை வாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பறவைகளின் வருகையால் மன்னாருக்கு படையெடுக்கும் மக்கள்



(மன்னார்)
மன்னார் மாவட்டத்திற்கு வருகை தரும் வெளிநாட்டு பறவைகளின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

குறிப்பாக பிளமிங்கோ என அழைக்கப்படும் பூநாரைகள் நூற்றுக்கணக்கில் மன்னாருக்கு வருகை தந்த வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் குறித்த பறவைகளை பார்வையிடுவதற்காக அதிகளவான மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மன்னார் மாவட்டத்திற்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-285)

# தொல்லியல் திணைக்கள பயிற்சி பட்டறை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
தொல்லியல் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் பாரம்பரிய தமிழ் கலாசாரம் தொடர்பான விரிவுரை மற்றும் பயிற்சி பட்டறை நிகழ்வு யாழில் நடைபெற்றது.

யாழ். கோட்டையில் நேற்று முன்தினம் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் பா.கபிலன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றதுடன் வளவாளராக கலாசார திணைக்கள உத்தியோகத்தர் மார்க் கண்டு அருட்செல்வன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-33)

# யாழில் இடம்பெற்ற பொலிஸ் பரிசோதனை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)
யாழ். பொலிஸ் நிலைய வருடாந்த பொலிஸ் அணி வகுப்பும் பொலிஸ் பரிசோதனையும் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது

குறித்த பரிசோதனை நிகழ்வில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த பரிசோதனைகளை முன்னெடுத்தார். அதனை தொடர்ந்து பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும் இடம் பெற்றது.

அதேவேளை பரிசோதனையின் போது, யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் சீருடைகள், ஆயுதங்கள் வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டதோடு பொலிஸாருக்கு விசேட அறிவுரைகளும் வழங்கப்பட்டன. (நி-5-6-33)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச இலக்கிய விருது ஏற்பாட்டுக் குழு ஒன்றிணைந்து வருடாவருடம் ஏற்பாடு செய்யும் "அரச இலக்கிய விருது வழங்கல் விழா - 2024" தொடர்பாக, எழுத்தாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்களிடமிருந்து தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் நூல்கள் விருது க்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2023 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில், முதற் பதிப்பாக வெளியிடப்பட்டதும், 49 பக்கங்களுக்குக் குறையாததுமான அச்சிடப்பட்ட நூலின் மூன்று பிரதிகள் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றை "அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு எதிர்வரும் 2024.03.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க முடியும்.

மேலும் இவ் விடயம் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர். ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-5-6)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 10/08, பாடசாலை வீதி, வட்டாரம் -06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06. பாடசாலை வீதியிலுள்ள இல: 10/08 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரி** ஆகியவர் முதலாம் பகுதியாகவும் **வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்** ஆகியவர் இரண்டாம் பகுதியாகவும் **வேலுப்பிள்ளை பரமசாமி** ஆகியவர் மூன்றாம் பகுதியாகவும் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1206/ 03.06.1987 ஆம் இலக்க பிரிவிடல் உறுதியால் பிரிவிடல் செய்து தத்தம் பகுதிகளுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் குறித்த ஆதனத்திற்குரிய அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடாது குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **வேலுப்பிள்ளை பத்மாவதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12211/ 21.03.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **வேலுப்பிள்ளை பத்மாவதி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வேலுப்பிள்ளை பத்மாவதி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(19129)

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 300 | 325 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 800 | 1000 | 850 |
| தக்காளி | 800 | 800 | 700 | 900 | 675 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 150 | 125 |
| கோவா | 650 | 450 | 500 | 500 | 600 |
| கரட் | 800 | 750 | 800 | 900 | 900 |
| பூசணி | 280 | 300 | 250 | 350 | 230 |
| புடோல் | 200 | 250 | 300 | 300 | 120 |
| வாழைக்காய் | 250 | 260 | 240 | 300. | 210 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 350 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 380 | 350 | 400 | 350-480 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 400 | 540 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 500 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 120 |
| பயற்றங்காய் | 300 | 350 | 400 | 400 | 455 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 600 | 450 |
| பீற்றூட் | 200 | 300 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 500 | 1000 | 750 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1200 | 1400 | 1000 |
| போஞ்சி | 350 | 500 | 450 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 250 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50-80 |
| தேசிக்காய் | 150 | 300 | 250 | 200 | 145 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 70-110 | 50-110 |
| இராசவள்ளி | 350 | 350 | 350 | 500 | 450 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 300 | 300 | 210 |
| முள்ளங்கி | 100 | 100 | 300 | 200 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியன் துப்பாக்கிகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

## 12 ஈயக்குண்டுகள், 3 யானை வெடி மீட்பு



(தருமபுரம்)

பிரமந்தனாறு கல்லாறு பகுதியில் இரண்டு இடியன் துப்பாக்கிகள், கட்டுத் துவக்குடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுர பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்க அமைவாக குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது வீடு ஒன்றில் மறைக்கப்பட்ட நிலையில் இருந்த மூன்று உள்ளூர் துப்பாக்கிகள், வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் கம்பி, ஈயக் குண்டுகள் 12 மற்றும் யானை வெடி மருந்து 3 மீட்கப்பட்டதோடு சந்தேக நபரொருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நபரையும் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களையும் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர். (நி-5-6-316)

# போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இருவர் கைது

(மன்னார்)

மன்னாரில் போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படை மற்றும் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவி னரால் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக் கையின் போது 1472 போதை மாத்திரைகளுடன் 2 சந்தேக நபர்க ளும் மற்றும் ஒரு முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சிலாவத்துறை மற்றும் மன்னார் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடையவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மருந்து மாத்திரைகள் மற்றும் முச்சக்கர வண்டியுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (நி-5-6-285)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் யாழ்.மாவட்டத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (நி-5-6)


## சேவையை நயத்தல்



Congratulations

திருமதி. உதயநிலா லோகநாதன்

SLTS-I (உப அதிபர்)

20.01.2024 அன்று தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற எமது பாடசாலையின் உப அதிபரும் விஞ்ஞானபாட ஆசிரியையுமான திருமதி.உதயநிலா லோகநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவைவிபரம்

| | | |
|---|---|---|
| 22.03.1990 - 31.12.2000 | - | யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை |
| 01.01.2001 - 14.06.2002 | - | யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை |
| 15.06.2002 - 18.09.2012 | - | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் |
| 19.09.2012 - 20.01.2024 | - | யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம். |

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்
யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்.

(19102)

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி.

மணிகலாவதி அருந்தவராசா

(SLTS-I) B.A, Dip in Ed

Best Wishes

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| யா/ அல்லாய் வடக்கு R.C.T.M.S | - | 21.10.1988-31.12.1994 |
| யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் | - | 01.01.1995-31.12.1995 |
| மன்/யோகபுரம் மகா வித்தியாலயம் | - | 01.01.1996-31.03.1996 |
| மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரி | - | 01.04.1996-31.08.1998 |
| யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் | - | 01.09.1998-09.05.2010 |
| யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் | - | 10.05.2010-22.04.2018 |
| யா/தேவரையாளி இந்துக் கல்லூரி | - | 23.04.2018-01.02.2024 |

எமது பாடசாலையில் கடமையாற்றி 01.02.2024 முதல் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியரது ஓய்வு காலம் சிறக்கவும் நீடூழி காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

[C-9356]

பணியாளர் நலன்புரிச்சங்கம்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி,

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



செல்வி. மாலதி சிவராசா (பிரதி அதிபர்)

மணிவிழா வாழ்த்துப்பா (16.02.2024)

மணிவிழா நாயகியாம்-எம்
மாலா ரீச்சருக்கு
அளவற்ற அன்போடு
அர்ப்பணிப்பு உணர்வோடு
அறப்பணிகள் பல செய்து
அன்பால் எமை ஈர்த்தீர்கள்

சேவைகள் பல ஆற்றி -சிறப்பு
மேன்மைகள் கண்ட உம் சேவை
முற்றுப்புள்ளி அற்று-முழுதாய்
என்றும் தொடர்ந்திடணும்

உயர் ஆளுமை கொண்ட
உத்தமமான உங்கள் சேவை
மணிவிழா கடந்தும் -பல
தசாப்தங்கள் நிலைக்கட்டும்
உம் பாதம் தடம் ஒற்றி- உம்
பின் தொடர்ந்து நகர்ந்திடுவோம்

நீடித்த மகிழ்ச்சி நிரந்தரமாய் உமை சூழ
அன்பின் வாழ்த்துக்களும் இறை ஆசிகளும்...

கல்விப்பணி
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாலயம்
01.10.1992 இருந்து 09.05.2010
யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம்
10.05.2010 இருந்து 16.02.2024

கல்விகற்ற பாடசாலைகள்
ஆரம்பக்கல்வி-யா/ஞான பண்டிதா வித்தியாசாலை
இடைநிலைக்கல்வி-யா/இந்து மகளிர் கல்லூரி
உயர்தரம்- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

16.02.2024 இன்று தனது பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது பாடசாலை பிரதி அதிபர் செல்வி.மாலதி சிவராசா அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(19125)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்


# 3 ஆவது நாளாக தொ


# விவசாயிகள் போரா

## ரயிலை மறித்து ஆர்ப்பா

(டில்லி)

**டில்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள விவசாயிகளின் போராட்டமானது தொடர்ந்து 3 ஆவது நாளாகவும் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த பேரணியை ஹரியாணா எல்லையில் பொலிஸார் தடுத்ததால் விவசாயிகள் நேற்று ரயில் மறியல் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.**





விவசாய கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு ஓய்வூதியம், விவசாயிகள் மீது பதியப்பட்ட வழக்குகளை இரத்து செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பஞ்சாப்-ஹரியாணாவின் ஷம்பு எல்லையில் நேற்று முன்தினம் ஒன்று திரண்ட விவசாயிகள் டில்லி சலோ என்ற முழக்கத்தை முன்வைத்து டில்லி நகரை நோக்கி பேரணியாக செல்ல முயன்றபோது பொலிஸாருக்கும் விவசாயிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதால் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் கூட்டத்தை கலைக்க முயன்றதாக

## துபாய் புர்ஜ் கலிஃபாவில் ஒளிர்ந்த இந்தியாவின் மூவர்ணக் கொடி



(அபுதாபி)

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளிக்கும் விதமாக, துபாயில் அமைந்துள்ள உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் இந்தியாவின் மூவர்ண கொடி ஒளிரவிடப்பட்டது.

துபாயில் நடைபெறும் "உலக அரசாங்க மாநாடு 2024-இல்" சிறப்பு விருந்தினராக பங்கேற்க 2 நாள் அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபிக்கு பிரதமர் மோடி சென்றிருந்தார்.

அந்நாட்டு ஜனாதிபதி முகமது பின் சையுத் அல் நஹ்யானுடனான பிரதமரின் பேச்சுவார்த்தையில் இரு நாடுகள் இடையே 10 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளிக்கும் விதமாக அந்நாட்டில் உள்ள உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் இந்தியாவின் மூவர்ண கொடி நேற்று முன்தினம் இரவு ஒளிரவிடப்பட்டது.

மேலும், "இந்திய குடியரசின் சிறப்பு விருந்தினரே வருக ! வருக!" என்ற வாசகமும் அதில் இடம்பெற்றிருந்தது.

இந்தப் புகைப்படங்களைப் பகிர்ந்து, துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷீத் அல் மக்தௌம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நிகழாண்டு உலக அரசாங்க மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்திய குடியரசின் சிறப்பு விருந்தினர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அன்புடன் வரவேற்கிறோம்.

நமது நாடுகளுக்கிடையே உள்ள வலுவான உறவுகள் சர்வதேச ஒத்துழைப்புக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன" எனக் குறிப்பிட்டிருந்தார். (ந-5-6)

## இடம்பெயரும் உ
## அழிவடையும்

### ஐ.நா சபை அறிக்கை

(நியூயோர்க்)

காலநிலை மாற்றம் மற்றும் மனித செயற்பாடுகளின் விளைவாக உலகில் இடம்பெயரும் உயிரினங்களில் ஐந்தில் ஒரு பகுதி அழிந்து போகும் அபாயத்தில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயரும் விலங்குகள் பற்றிய அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் 100 கோடி விலங்குகள் பாலைவனங்கள், சமவெளிகள் அல்லது பெருங்கடல்கள் வழியாக இனப்பெருக்கம் மற்றும் உணவுகளை தேடி இடப்பெயர்வை மேற்கொள்கின்றன.

இந்நிலையில், இடம்பெயரும் உயிரினங்களின் மீது திணிக்கப்படும் நீடிக்க முடியாத அழுத்தங்கள் அவற்றின் எண்ணிக்கையை குறைவடைய செய்வதோடு, உணவு விநியோகத்தை சீர்குலைத்து வாழ்வாதாரத்தை அச்சுறுத்துகிறது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும் பிற வகையான அதீத சுரண்டல் உள்ளிட்ட செயற்பாடுகளால், மனிதர்கள் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளனர். இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் பட்டியலில் உள்ள 70 சதவீதமான உயிரினங்கள் பாதிப்படைகின்றன.

வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களால் வறட்சி அல்லது காட்டுத் தீ போன்றவை வானிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக இடம்பெயர்வு காலத்தை சீர்குலைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

டரும்

ட்டம்

ட்டம்



வும் இதில் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போராட்டமானது டில்லி மாத்திரமன்றி அண்டைய மாநிலங்களிலும் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

## ரஃபா மீது இஸ்ரேல் தாக்கினால் மனித பேரழிவு ஏற்படும்

(நியூயோர்க்)

காசாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ராஃபா நகரம் மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தினால் பேரழிவு ஏற்படக்கூடும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான உதவிகள் தொடர்பான பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காசா மீது நடத்தப்படும் மிக கடுமையான தாக்குதல்களால் பாலஸ்தீன மக்கள் நிலைகுலைந்திருப்பதாக ஐ.நாவின் மனிதாபிமான உதவிகள் பிரிவின் தலைவர் மார்ட்டின் கிரிஃபித்ஸ் தெரிவித்துள்ளார்.

இருப்பிடங்கள், உறவினர்கள் மற்றும் உடைமைகளை இழந்து சொந்த இடங்களை விட்டு வெளியேறிய பாலஸ்தீன மக்கள் ராஃபாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், ராஃபா நகரத்தையும் இஸ்ரேல் தாக்கினால் பெரும் மனிதப் பேரழிவு ஏற்படும் எனவும் கிரிஃபித்ஸ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான வேறு இடங்களுக்கு செல்ல முடியாது, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் ராஃபாவில் சிக்கியுள்ளதுடன் அவர்கள் போதிய உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி தவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், ராஃபா நகர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவது உறுதி எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் ராஃபா நகரில் ஹமாஸ் போராளிகள் மக்களுக்கு மத்தியில் பதுங்கி இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளதுடன் அவர்களை வேரோடு அழிக்க போவதாகவும் அந்த அழிவின் மூலமே காசா பிரச்சினை முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்படியான சூழ்நிலையில், காசாவின் ராஃபா நகர் மீது தொடர் தாக்குதலை



நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது.

ஏற்கனவே அந்த நகரத்தின் மீது விமான குண்டு வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.


எந்த நேரத்திலும் இஸ்ரேல் மும்முனை தாக்குதலை ஆரம்பிக்கலாம் என மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் காசா மீதான போரில் இஸ்ரேல், பாலஸ்தீன மக்களுக்கு தீங்கு விளைவித்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் அவை குறித்து அமெரிக்க விசாரணைகளை நடத்தி வருகிறது.

எனினும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தியே இஸ்ரேல் படையினர் பாலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்தி வருவதுடன் அந்த தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்பட அமெரிக்காவின் ஆயுதங்களே காரணம் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு தொடர்ந்தும் ஆயுதங்களை விற்பனை செய்து வருவது தொடர்பிலும் கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (நி-5-6)

## உயிரினங்கள் அபாயத்தில்



இதேவேளை, வாழ்விடங்கள் அழிந்து வருவதால் 75 சதவீதமான உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அணைகள், குழாய்கள் அல்லது காற்றாலைகள் போன்ற உட்கட்டமைப்பை நிறுவும்போது வாழ்விடங்கள் மற்றும் இடம்பெயர்வு பாதைகளை சீர்குலைப்பதைத் தவிர்க்குமாறு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய உலகளாவிய உயிர்ப்பல் வகைமை ஒப்பந்தத்தின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் உலகின் 30 சதவீதமான நிலம் மற்றும் கடல் பிரதேசங்களை இயற்கைக்காக ஒதுக்கி வைப்பதற்கான உறுதிமொழியை மதிக்குமாறு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி, 21 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கன்சாஸ் நகரில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

கன்சாஸ் நகரத்தில் இடம்பெற்ற அணி வகுப்பின் போதே இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிசூட்டு சம்பவத்தினை தொடர்ந்து 22 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில்




பல சிறுவர்கள் உள்ளனர்.

எட்டுபேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என தெரிவி

த்த அதிகாரிகள், மூவரை கைதுசெய்து ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர். (நி-5-6)

## விண்வெளிக்கு அணுகுண்டு அனுப்பவுள்ள ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யா விண்வெளிக்கு அணு குண்டு ஒன்றை அனுப்பவுள்ளதாக அமெரிக்க தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், குறித்த அணு குண்டை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியில் ரஷ்யா இறங்கியுள்ளதாகவும் ரஷ்ய பொறியியலாளர்கள் ஆயுதத்தை உருவாக்கி வருவதாகவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

அத்தோடு, தகவல் அறிய வந்ததை தொடர்ந்து, அமெரிக்க தலைவர்கள் அவசரமாக கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, அந்த அணுகுண்டானது பூமியின் மீது வீசப்படுவதற்காக அல்ல என்றும் அது விண்வெளியில் இருக்கும் செயற்கைக் கோள்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு என்றும் அமெரிக்க தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கான புதிய கடன் திட்டம் அரசாங்கத்தால் அறிமுகம்

(கொழும்பு)

விளைச்சலுக்கான நிர்ணய விலை தொடர்பான பிரச்சினையை நிவர்த்திப்பதற்கான புதிய திட்டமொன்று அரசாங்கத்தினால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள், மொத்தமாக நெல்லை சேகரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் வகையில் இம்முறை பெரும்போகத்தின் போது நெல் கொள்வனவு செய்வதற்காக "மடபன" கடன் திட்டத்தை செயற்படுத்த தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதியின் பொது மக்கள் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் இந்த கடன் வசதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடன் திட்டத்தின் கீழ், 9 பில்லியன் ரூபாய் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாவும் நெல் களஞ்சியசாலை உரிமையாளர்களுக்கும் தொகை நெல் சேகரிப்பாளர்களுக்கும் அதிகபட்சமாக 25 மில்லியன் ரூபாய் வரை கடன் வழங்கப்படவுள்ளது.

கடனை திருப்பிச்செலுத்த 180 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுவதுடன், 15 வீத வருட வட்டியில் 4 வீதம் திறைசேரியினால் அந்தந்த வங்கிகளுக்கு வழங்கப்படும். அதன்படி, கடன் பெறுநர்கள் 11 வீதத்தை மாத்திரம் வருட வட்டியாக செலுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு சிறந்த விலையை பெற்றுக் கொடுப்பதோடு, மக்களுக்கும் நியாயமான விலையில் அரிசியை பெற்றுக்கொடுப்பதே இந்த கடன் திட்டத்தின் நோக்கமாகும் எனவும் கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# அதிகரிக்கும் விவாகரத்துகள் —நீதி அமைச்சர் தகவல்—



(கொழும்பு)

இலங்கையில் திருமண முறிவுகள் அதிகரித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்காக விசேட நிகழ்ச்சி ஒன்று தெஹிவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு மாத்திரம் நீதிமன்றங்களில் 48,391 விவாகரத்து வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதெனவும் மேலும், இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## கடந்த வருடத்தில் மட்டும்

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 10,000 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

கடந்த ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சுமார் 10,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 2,242 முறைப்பாடுகள், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 472 முறைப்பாடுகள், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 404 முறைப்பாடுகள், சிறுமிகளை வன்கொடுமை செய்தமை தொடர்பான 51 முறைப்பாடுகள், சிறுவர்களை ஆபாசமாக பயன்படுத்தியமை தொடர்பான 6 முறைப்பாடுகளும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சிறுவர்களை போதைப்பொருள் கடத்தல், தொழிலாளர்களாக பயன்படுத்துதல், குடும்ப வன்முறையால் ஒடுக்குதல், புறக்கணித்தல், கடத்தல், காயப்படுத்துதல், சிறுவர்களை விற்பனை செய்தல், பாடசாலை கல்வி வழங்காமை போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 7,466 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் இந்த முறைப்பாடுகள் 2023 ஆம் ஆண்டு அதிகரித்துள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

மேலும், சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக தற்போதுள்ள சில சட்டங்களை திருத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 38



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தோலின் தன்மை

ஒரு பையன் எனக்கு ரொம்பவும் வேண்டியவன் என் கூட படித்துக் கொண்டிருந்தான். நாங்கள் இரண்டு பேரும் ஹொஸ்டலிலே ஒரே றூம். தினமும் காலையிலே அவன்தான் முன்னாடி எழுந்திருப்பான். எழுந்த உடனே என்கிட்ட கூட ஒன்றுமே பேச மாட்டான். ரொம்ப தீவிரமாக யோசிக்க ஆரம்பிப்பான். என்னடா யோசிக்கிறாய்? என்று நான் கேட்பேன். அவன் ரொம்ப நிதானமாக பதில் சொல்வான். இன்றைக்கு குளிக்கலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கின்றேன். என்பான். இப்படி அவன் யோசித்த நாள் தான் அதிகம். குளிச்ச நாள் குறைவுதான்.

அவன் கூட ஒரு தடவை குற்றாலத்துக்குப் போயிருந்தேன். அங்கேயும் அவன் இதே மாதிரித்தான் யோசிக்க ஆரம்பித்தான். அவனை மெதுவாக தள்ளிக்கிட்டு போய் அருவியிலே நிற்க வைக்கிறதுக்குள்ள போதும் போதும் என்று ஆச்சுது. அப்பவும் எண்ணெய் தேய்ச்சிக்க மாட்டேன் என்று சும்மாதான் குளிச்சான்.

குற்றாலத்தில இப்ப நல்ல சீசன் என்று பேப்பரில் பார்த்ததும் எனக்கு அவன் ஞாபகம் வந்திட்டுது. குற்றாலத்தில் எண்ணெய் தேய்ச்சிக்காம அருவியிலே நிற்கிறது அபூர்வம். சில பேரு சொல்லுவாங்க எண்ணெய் தேய்ச்சுக்கிறதனால ஒன்றும் பிரியோசனம் இல்லை. நம்ம தோல் எண்ணெயை உறிஞ்சிறது இல்லை என்பாங்க.

சமீப காலத்திலே ஆராய்ச்சியெல்லாம் பண்ணி பார்த்துட்டு தோலுக்கு உறிஞ்சுற சக்தி உண்டு என்று சொல்லிப் போட்டாங்கள்.

தோல் மூலமாக வைத்தியம் பண்ணி சில நோய்களை தீர்க்கலாம் என்று நம் முன்னோர்கள் முன்னாடியே அதை செஞ்சிக்கிட்டுத்தான் வர்றாங்க. வாதநோய்க்கு சிகிச்சை என்ன? சில தைலத்தை தயார் பண்ணி தோலிலே சூடு பறக்க தேய்க்கிறது ஒத்தடம் கொடுக்கிறது வேது பிடிக்கிறது. இது மாதிரியான புற சிகிச்சைகள் ஏற்கனவே சித்தவைத்தியத்திலே உண்டு.

ஆனால் இந்தக் காலத்து பாடப் புத்தகத்திலே தோல் ஒரு நம்பகமான கவசம். அது மூலமாக எதுவும் உள்ளே போக முடியாது என்று தான் நாம படிச்சோம்.இப்ப அந்த அபிப்பிராயத்தை மாத்திக்க வேண்டிய நேரம் வந்திட்டுது. பியாட்டர் ஸ்லைன்கோ என்ற ஒரு ரஷ்ய நிபுணர். மனித உடம்பையும் மிருக உடம்பையும் மூடியிருக்கின்ற தோலையெல்லாம் அவர் ஆராய்ந்தார். அதோட உட்புகு திறனை ஆராய்ச்சி பண்ணினார். என்ன கண்டுபிடித்தார் தெரியுமா?

குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலே தோல் வழியாக பொருட்கள் உள்ளே போக முடியுமாம்.சிர சந்தர்ப்பங்களிலே தோல் அதை சுத்தியிருக்கின்ற காற்று அல்லது திரவங்களிலேயிருந்து சில கரைசல்களையும் (கரைசல்கள்-பால்மங்கள்-தொங்கல் கரைசல்கள்) விரும்பி உறிஞ்சி உள்ளே இழுத்துக்குதாம். இப்ப உதாரணத்துக்கு

அதிகமாக வியக்கின்ற சமயத்திலே தோலிலே உள்ள துளைகள் பெரிசாயிடுது. வியர்க்கிறது நின்ற உடனேயே அதெல்லாம் சுருங்கி பழைய நிலைமைக்கு வாறதுக்கு கொஞ்ச நேரம் ஆகும். அந்த சமயத்திலே தோல் மேல் நுண்ணிய துகள்-கரைசல் இப்படி ஏதாவது இருந்தா வியர்வை நாளங்கள் அதையெல்லாம் தீவிரமாக உறிஞ்சி உள்ளே இழுக்குதாம்.

ஒருத்தர் வெயிலிலே நடந்துட்டு வந்து வியர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள்ளே நுழைகிறார். ஈரத் துணியால் உடம்பைத் துடைக்கிறார். அப்ப என்ன ஆகும் தெரியுமா? துணியிலே இருக்கிற ஈரத்தோட அதிலே உள்ள அழுக்கு கிருமிஎல்லாம் சேர்ந்து தோலுக்குள்ளே போயிடும்.

தோலுக்கு இருக்கிற இந்தத் தன்மையை மருத்துவ சிகிச்சை முறைகளிலே பயன்படுத்தலாம். நீராவிக்குளியல் செய்து விட்டு வருகின்ற ஒருவரை ஒரு சிறிய அறைக்குள்ளே உட்கார வைத்து அதுக்குள்ளே மருந்து ஆவியை பரப்பினால் அது தோலுக்குள்ளே புகுந்து உடம்பிலே பரவும்.

பால்சீரம் உடம்புக்கு ரொம்பவும் நல்லது.பாலிலே இருந்து கொழுப்பு பூராகவும் எடுத்துட்டா வே (Whey) என்கின்ற திரவம் மிஞ்சும். அதுதான் பால்சீரம் உடம்பை வேர்க்க வைத்து அதுக்கப்புறம் இந்த பால்சீரக் கரைசலை உடம்பு பூரா பூசினா இருக்கிற சத்தையெல்லாம் உள்ளே போய்விடும். மருத்துவப் பயனுள்ள களிமண்ணை உடம்பிலே பூசுற ஒரு சிகிச்சை முறை மேல் நாடுகளிலே உண்டு. இங்கேயும் இயற்கை வைத்தியத்திலே களிமண் குளியல் உண்டு.

ஆனால் களிமண்ணினாலே மூடப்பட்ட தோல் வியர்த்தால்தான் மண்ணிலே இருக்கிற மருந்துச் சத்துக்கள் உடம்புக்குள்ளே பரவ முடியும். இதுக்கு என்ன பண்ணலாம் என்றால் நோயாளியை நல்லா குளிப்பாட்டி விட்டு அதுக்கப்புறம் அவரை ஒரு சூடான அறையிலே உட்கார வைத்து தாராளமாக வியர்க்கிற மாதிரி செய்யலாம். அதுக்கப்புறம் உடம்பை துடைச்சிக்கிட்டு நீர்த்த களிமண் கரைசலை உடம்பிலே பூசிவிடலாம். இப்படி செய்தா மண்ணிலே இருக்கிற சத்து உடம்புக்குள்ளே போறது உறுதியாம்.

ஒரு வேடிக்கை பார்த்தீங்களா மனிதன் தான் கடைசியில மண்ணுக்குள்ள போறான் என்றால் அதுக்கு முன்னாடி மண்னே மனிதனுக்குள்ள போயிடும் போல இருக்கு.

எனக்கு தெரிஞ்ச ஒரு சின்ன ஆலோசனை. கோவப்படாம கேட்டுக்கிறதுன்னா சொல்கிறேன். இனிமேல் எங்கேயாவது எருமைமாடு சேற்றிலே கிடந்தா அதைப் பார்த்துட்டு நீங்கள ஒதுங்கி போவாதீங்க. கிடுகிடுன்னு நீங்களும் அதிலே இறங்கி குளிக்க ஆரம்பிச்சிடுங்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024–13.03.2024



**மிதுன இராசி வாசகர்களே!**

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதம்:** இந்த மாதம் உங்களுக்கு யோகமான மாதமாகும். பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் லாப, தைரிய, சத்ரு ஸ்தானங்களைப் பார்ப்பதால் உங்கள் நிலையில் இதுவரை இருந்த சங்கடங்கள் எல்லாம் விலகும். நீங்கள் நினைப்பதெல்லாம் நடந்தேறும். உடல்நிலையில் முன்னேற்றம் உண்டாகும். வரவு அதிகரிக்கும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை உண்டாக்குவார். புதிய சொத்து சேர்க்கையை ஏற்படுத்துவார். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். குழந்தை பாக்கியத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு உண்டாகும். புதபகவான் மாதத்தின் பிற்பகுதியில் உங்களுக்கு யோகத்தை வழங்குவார். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வைப்பார். சிலருக்கு சொத்து சேர்க்கை உண்டாகும். வியாபாரம், தொழிலில் இருந்த தடைகள் விலகி லாபம் தோன்றும். சிலருக்கு புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டாகும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவர். பெண்களின் கனவுகள் நிறைவேறும். கல்வி, வேலைவாய்ப்பு போன்ற முயற்சிகள் வெற்றியாகும். திருமண வயதினருக்கு திருமணம் கைகூடும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். வெளிநாட்டு தொடர்புகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். விவசாயிகள் முயற்சி வெற்றியாகும், மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவர்.

சந்திராஷ்டமம்: மார்ச் 6, 7.

அதிர்ஷ்ட நாள்: பெப்.18, 23. மார்ச். 5, 9.

பரிகாரம்: கோளாறு பதிகம் பாடி சிவனை வழிபட குறை தீரும்.

**திருவாதிரை:** யோகக்காரகனான ராகுவின் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டமான மாதமாகும். உங்கள் நட்சத்திர நாதன் கேந்திர பலம் பெறுவதுடன் மாதத்தின் பிற்பகுதியில் இராசிநாதனும் அங்கே சஞ்சரிப்பதால் இதுவரையில் இருந்த சங்கடம் விலகும். மாதத்தின் பிற்பகுதியில் சொத்துச் சேர்க்கை உண்டாகும். உங்கள் நீண்டநாள் கனவு நிறைவேறும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் தொட்டதெல்லாம் பொன்னாகும். வரவு அதிகரிக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தைரியமாக செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். குலதெய்வ அருள் பரிபூரணமாக இப்போது உண்டாகும். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். வாழ்க்கைத் துணையுடன் இருந்த சங்கடங்கள் விலகும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். நீண்ட நாள் நெருக்கடிகள் முடிவிற்கு வரும். ஒரு சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். வேலைவாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். வெளிநாட்டிற்கு செல்ல முயற்சித்தவர்களுக்கு அதற்குரிய அனுமதிகள் கிடைக்கும். பெண்களின் விருப்பங்கள் நிறைவேறும். தடைப்பட்டிருந்த முயற்சிகள் லாபமாகும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். எதிர்பார்த்த பதவி உயர்வு ஏற்படும். கலைஞர்களுக்கு இந்த மாதம் யோகமான




மாதமாகும். புகழ், செல்வாக்கு போன்றவை உண்டாகும். விவசாயிகளின் செயல்களில் எதிர்பார்த்த லாபம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும்.

சந்திராஷ்டமம்: மார்ச். 8.

அதிர்ஷ்ட நாள்: பெப். 13, 14, 22, 23. மார்ச். 4, 5, 13

பரிகாரம்: நந்தீஸ்வரரை வழிபட்டால் நன்மைகள் உண்டாகும்.

புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதம்: உங்கள் நட்சத்திரநாதன் குருபகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இதுவரையில் இருந்த சங்கடங்கள் விலகும். உங்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். செல்வாக்கு உயரும். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். பாக்கிய ஸ்தான சனி பகவானால் பிரச்சினைகள் முடிவிற்கு வரும். பெரியோரின் ஆசீர்வாதம் உண்டாகும். தெய்வஅருள் ஏற்படும். சிலர் கோயில்களுக்கு புனித யாத்திரை சென்று வருவதுடன் வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாலினரால் ஏற்பட்ட சங்கடங்கள் முடிவிற்கு வரும். உங்கள் நிர்வாகத்திறன் வெளிப்படும். வேலை தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். இயந்திரத் தொழில், ஆட்டோமொபைல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், மருத்துவம், பொறியியல் துறையினர் எதிர்பார்த்த ஆதாயத்தைக் காண்பர். அரசு, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் உயர்வு பெறுவர். பெண்களின் விருப்பம் நிறைவேறும். முயற்சிகள் வெற்றி பெறும். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். வேலைக்காக முயற்சித்தவர்களின் எண்ணம் நிறைவேறும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். விவசாயிகள் திட்டமிட்டு செயற்படுவதால் லாபம் காண முடியும். கலைஞர்களுக்கு யோகமான மாதமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவதால் நன்மை உண்டாகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் 9

அதிர்ஷ்ட நாள்: பெப். 21, 23, மார்ச். 3, 5, 12

பரிகாரம்: லட்சுமி ஹயக்ரீவரை வழிபட விருப்பம் நிறைவேறும்.

---



**கடக இராசி வாசகர்களே!**

புனர்பூசம் 4 ஆம் பாதம்: சந்திர பகவானை இராசிநாதனாகவும் குருபகவானை நட்சத்திர நாதனாகவும் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் கேது பகவானால் யோகம் உண்டாகும். விருப்பம் நிறைவேறும். முயற்சி லாபமாகும். தைரியமும் துணிச்சலும் அதிகரிக்கும். எட்டாம் இடத்தில் சனி பகவான் ஆட்சியாக சஞ்சரிப்பதால் உடல் ரீதியாக சில சங்கடங்களை சந்திக்க வேண்டியிருக்கும். இயந்திரப் பணியாளர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வாகனப் பயணத்திலும் கவனம் தேவை. சுயதொழில் செய்பவர்கள் தொழிலில் கவனமாக இருக்க வேண்டும். அரசு வழியில் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் கணக்கு வழக்குகளில் கவனம் தேவை. உங்களுக்கு எதிராக சிலர் சதி புரிவார்கள் என்பதால் எல்லாவற்றிலும் விழிப்புணர்வு வேண்டும். வியாபாரத்தில் மிக விழிப்புணர்வு அவசியம். பணியாளர்கள் அனைத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையெனில் தேவையற்ற சங்கடங்கள் தோன்றும். ஏழாம் இடத்தில் சுக்கிரனும் செவ்வாயும் இணைந்திருப்பதால் எதிர்பாலினரிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மனதில் ஆசைகளுக்கு இடம் கொடுப்பதால் வீண் சங்கடங்களை சந்திக்க நேரிடும். குருபகவானின் பார்வைகள் சாதகமாக இருப்பதால் குடும்பத்தில் நிம்மதி இருக்கும்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். ஆரோக்கியத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். பெண்கள் தங்களின் உடல்நிலை யோடு, கணவரின் உடல்நிலையிலும் கவனம் செலுத்துவது அவசியம். புதிய நட்புகளிடம் மிகுந்த எச்சரிக்கை தேவை. பாக்கிய ராகுவால் வெளிநாட்டு தொடர்புகள் வெற்றியளிக்கும். பணவரவு அதிகரிக்கும். வெளிநாட்டிற்கு செல்வ தற்காக முயற்சித்தவர்களின் எண்ணம் நிறைவேறும். மாதத்தின் முற்பகுதியில் சிலர் புதிய சொத்து வாங்குவீர்கள். விவசாயிகள் விளைச்சலில் கூடுதல் கவனம் செலுத்துவது நன்மையளிக்கும். மாணவர்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் கல்வியின் மீது இருக்கும் ஆர்வம் பிற்பகுதியிலும் இருக்க வேண்டும்.

சந்திராஷ்டமம்: மார்ச் 9

அதிர்ஷ்ட நாள்: பெப். 20,21, மார்ச் 2,3,11,12

பரிகாரம்: கண்ணுடைய நாயகியை வணங்க வளம் கூடும்.

பூசம்: தொழில், கர்ம காரகனான சனிபகவானின் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு எப்போதும் தன்னம்பிக்கை, தைரியம் கூடுதலாகவே இருக்கும். இந்த மாதம் உங்கள் நட்சத்திரநாதன் எட்டாம் இடத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கிறார். சூரியபகவானும் அங்கே இணைந்திருக்கிறார் என்றாலும் இருவருமே மறைவு பெற்றிருப்பதால் நீங்கள் செய்யும் தொழிலில் உங்கள் கவனத்தை முழுமையாக செலுத்த வேண்டும். பணியில் நெருக்கடி தோன்ற வாய்ப்பிருப்பதால் கவனமாக செயற்பட வேண்டும். பொதுவாக உங்கள் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு திருமண வாழ்வில் தடை, நெருக்கடி இருக்கும் என்பதால் இக்காலத்தில் வாழ்க்கைத் துணையுடன் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கோபத்திற்கு இடம் தராமல் எந்த ஒன்றையும் பரஸ்பரம் பேசி தீர்வு காண்பது நல்லது. மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் முயற்சி நிறைவேறும். குருபகவானின் பார்வைகள் சாதகமாக இருப்பதால் குடும்பத்தில் நிம்மதி நீடிக்கும். வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதால் லாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு இக்கால த்தில் சில சங்கடங்கள் தோன்றும். குறிப்பாக வாழ்க்கைத் துணையுடன் இணக்கமற்ற நிலை ஏற்படும் என்பதால் வார்த்தைகளில் எப்போதும் கவனம் தேவை. உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நன்மையளிக்கும். பயணத்தில் எச்சரிக்கை அவசியம். சிலருக்கு வெளிநாட்டு தொடர்புகள் வழியாக ஆதாயம் உண்டா




கும். புதிய சொத்துகள் வாங்குவீர்கள். சிலர் புதிய வீட்டில் குடியேறுவர். விவசாயிகள் கவனமாக செயற்படுவதால் எதிர்பார்ப்பு நிறைவேறும். மாணவர்கள் படிப்பின் மீது முழுமையான அக்கறை செலுத்து வது அவசியம்.

சந்திராஷ்டமம்: மார்ச் 10

அதிர்ஷ்ட நாள்: பெப்.17,20,26. மார்ச் 2,8,11

பரிகாரம்: தினமும் நவக்கிரகங்களை வழிபடுவது நன்மை தரும்.

ஆயிலியம்: வித்யாகாரகனான புத பகவானின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு தனித்திறமையும் ஆளுமையும் இருக்கும். சூழலைப் புரிந்து கொண்டு செயற்படும் ஆற்றல் இருக்கும். இந்த மாதம் உங்கள் நட்சத்திரநாதன் மாதத்தின் முற்பகுதியில் அனுகூலமாக சஞ்சரிப்பதால் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். திட்டமிட்டு செயற்படுவீர்கள். எதை அடைய வேண்டுமோ அதை அடைவதற்கு முயற்சித்து அதில் வெற்றி காண்பீர்கள்.

மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது பகவானும் முயற்சியை வெற்றியாக்குவார். குரு பகவானின் பார்வை பணவரவை அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றிடக்கூடிய நிலையை ஏற்படுத்தும். குடும்பத்தில் நிம்மதியான சூழலை உண்டாக்கும். தாய்வழி உறவுகளால் அனுகூலம் அதிகரிக்கும். எதிரிகள் விலகிச் செல்வர். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். பணியாளர்களுக்கு மேலதி காரிகளின் ஆதரவு உண்டாகும். வழக்கு, விவகாரங்கள் சாதகமாக இருக் கும். அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி, சூரியனும் உங்களுக்கு சாதக மான பலன்களை வழங்கும் இடத்தில் இல்லை என்பதால் அரசு வழியிலான முயற்சிகளில் எச்சரிக்கை அவசியம். உடல் நிலையில் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். விருப்பம் நிறைவேறும். எதிர்பார்ப்பு பூர்த்தி யாகும். சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை உண்டாகும். வாழ்க்கைத்து ணையுடன் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். விவசாயிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும். விளைச்சல் அமோகமாகும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

சந்திராஷ்டமம்: மார்ச் 11,12.

அதிர்ஷ்ட நாள்: பெப். 14,20,23. மார்ச். 2,5

பரிகாரம் : கால பைரவரை வண ங்க சங்கடம் யாவும் நீங்கும். (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 407





இந்த வீர வைஷ்ணவர் போட்டிக்கு வந்து விடுவாரே என்று சும்மா இருந்து விட்டேன்!

இதைக் கேட்டதும் அருள் மொழிவர்மர் கலகலவென்று உரத்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்டு வந்தியத்தேவன் உள்ளம் மகிழ்ந்தது. வெளிப்படையில் மேலும் கோபத்தைக் காட்டி, "சிரித்தால் மட்டும் சரியாகப் போய் விட்டதா? செய்த தவறுக்குப் பரிகாரம் என்ன?" என்றான்.

"ஐயா! வாணர்குல திலகமே! சத்தியம், தர்மம் என்று சொன்னேனே! சிம்மாசனம் வேண்டாம் என்று மறுத்ததற்கு அவை சரியான காரணங்கள் என்று தங்களுக்குப் படவில்லையா?"

"சத்தியம், தர்மம் இவற்றின் பேரில் ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் சபலம் இருந்தது. இனிமேல் அவற்றின் முகத்திலேயே விழிப்பதில்லை. எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை என்று முடிவு செய்து விட்டேன்."

"அடடா? ஏன்? எதற்காக அப்படிப்பட்ட முடிவு செய்தீர். அவற்றின் பேரில் என்ன கோபம்?"

"கோபம் ஒன்றுமில்லை. சத்தியம், தர்மம் என்னும் கன்னியர் மீது தாங்கள் காதல் கொண்டுவிட்டதாகச் சொல்லவில்லையா? அதற்காக இந்த இலங்கா ராஜ்யத்தைத் தியாகம் செய்ததாகவும் சொல்லவில்லையா? வேறொருவர் காதலித்த பெண்களை நான் மனத்தினாலும் நினைப்பதில்லை!"

பொன்னியின் செல்வர் மறுபடியும் கடகடவென்று சிரித்தார். "உம்மைப்போல் வேடிக்கைக்காரரை நான் பார்த்ததே இல்லை!" என்றார்.

"ஆம், ஐயா! தங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறது. எனக்கு வயிறு எரிகிறது. இலங்கைச் சிம்மாதனம் தங்களுக்கு வேண்டாம் என்றால், பக்கத்தில் நான் நின்றேனே என் பக்கம் கைகாட்டி 'இவனுக்குக் கொடுங்கள்!' என்று சொல்லியிருக்கக் கூடாதா?" என்றான் வந்தியத்தேவன்.

அருள்மொழிவர்மர் சிரித்து ஓய்ந்த பிறகு, "வந்தியத் தேவரே! இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிய காரியமா? அதிலும் புத்த பிக்குக்கள் கொடுத்து ஏற்றுக்கொள்வது சிறிதும் முறையல்ல. பின்னால் பெரிய விபரீதங்களுக்கு இடமாகும். மதத்தலைவர்கள் மத விடயங்களுடன் நிற்க வேண்டும். மதத் தலைவர்கள் இராஜரீக காரியங்களில் தலையிட்டால் மதத்துக்கும் கேடு. இராஜ்யத்துக்கும் கேடு. மேலும் இன்று எனக்குச் சிம்மாசனம் கொடுக்க வந்த புத்த பிக்குகள் இந்த நாட்டிலுள்ள எல்லா புத்த மதத்தாருக்கும் தலைவர்கள் அல்ல. இவர்கள் ஒரு கூட்டத்துக்குத் தலைவர்கள். இவர்களுடைய சங்கத்தைப்போல் இன்னும் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இவர்களிடம் நாம் இராஜ்யத்தை ஒப்புக் கொண்டால் இவர்களுடைய இஷ்டப்படி இராஜ்யம் ஆளவேண்டும். மற்ற இரு சங்கத்தாரும் உடனே நம் விரோதிகள் ஆவார்கள்!" என்றார்.

"வல்லத்து இளவரசருக்கு இப்போது இவ்விடத்து நிலைமை புரிந்ததா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"புரிந்தது, புரிந்தது! அங்கே விஷ்ணு பெரியவரா, சிவன் பெரியவரா என்று சண்டை போடுகிற மூடர்களைப் போல் இங்கேயும் உண்டு என்று புரிந்தது!" என்றான் வந்தியத்தேவன்.

"நீங்கள் இங்கே சண்டை ஆரம்பித்து விடாதீர்கள். இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. அதோ பெரஹரா ஊர்வலத்திலிருந்து ஜனங்கள் கலைந்து வரும் சத்தமும் கேட்கிறது. இனிமேல் சற்றுத் தூங்கலாம்" என்றார் இளவரசர்.

"எனக்குத் தூக்கம் வராது. நடு வீதியில் கையைத் தட்டி அழைத்து, நம்மை உயிருடன் சமாதியாகாமல் காப்பாற்றிய அம்மாள் யார் என்று தெரிந்து கொண்டால்தான் தூக்கம் வரும்."

"அவள் யார் என்பது இன்னும் எனக்கும் தெரியாது. ஆனால் அவளைப் பற்றி எனக்குத் தெரிந்த செய்திகளை வேணுமானால் சொல்லுகிறேன். கேட்க விரும்பினால் என் அருகில் வந்து உட்காருங்கள்!" என்று சொன்னார் இளவரசர்.


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பேயால் வந்த வாழ்வு

முன்னொரு காலத்தில் மதின் என்ற இளைஞன் பொன்னேரி என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தான். இவனது பெற்றோர் இறந்துவிட்டனர். இனி அந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல் பக்கத்திலுள்ள ஊருக்கு வேலை தேடிச் சென்றான். உச்சி வெயில் அதிகமானது.



அப்போது ஆலமரத்தடியில் படுத்து தூங்கினான். அவனை யாரோ தட்டி எழுப்புவது போல் இருந்தது. தூக்கம் கலைந்து விழித்த போது ஒரு பேய் மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது. பேய் பேய் என்று அலறினான்.

""தம்பி பயப்படாதே. நானும் உன்னைப் போல் மனிதன் தான். தற்சமயம் பேயாக இருக்கிறேன்."

மதினுக்கு கை, கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

""உன் பெயரென்ன தம்பி?"

""மதின்!"

""எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?"

""வேலை தேடி நகரத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன்."

""நானும் உன்னைப் போல் இருந்தவன் தான். நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் இந்த காட்டிற்கு வந்தேன். இங்கே தவம் செய்த முனிவரைப் பார்த்து கேலியாக சிரித்தேன். ஆத்திரம் அடைந்த முனிவர் என்னை பேயாகும்படி சபித்து விட்டார்.

""பிறகு நான் அவரைப் பார்த்து மன்றாடினேன்.

""ஐயா, தயவு செய்து இந்தச் சாபத்திற்கு ஏதேனும் விமோசனம் சொல்லுங்கள். இப்படி மனித பேயாய் நான் எத்தனை நாட்கள் திரிவது?" என்று கேட்டான்.

""சரி, நீ கெஞ்சிக் கேட்டுக் கொள்வதால் உனக்கு விமோசனம் தருகிறேன். உன் கதையை எந்த மனிதன் பொறுமையோடு கேட்கிறானோ அன்று நீ மீண்டும் மனிதனாவாய். பிறகு விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இம்மனிதப் பிறவியிலிருந்து விடுதலை அடைவாய்" என்றார்.

"பல காலம் நான் மற்றவர்களிடம் என் கதையை சொல்ல முயன்றேன். அவர்கள் என்னைப் பார்த்ததும் ஓடி விடுகிறார்கள்" என்று கூறிய பேய் மறைந்து போய் அழகான வாலிபன் தோன்றினான். சிறிது நேரத்தில் அவன் மேல் எழுந்து வானத்தை நோக்கிச் சென்றான். என்னை "எப்போது நினைத்துக் கொண்டாலும் உனக்கு நல்லதே நடக்கும் நீ எடுத்த காரியத்திலும் வெற்றி அடைவாய்," என்ற பேய் மேகத்தின் நடுவில் மறைந்து போனது. மதினுக்கு எல்லாமே கனவு போல் இருந்தது.

புதிய நகரை அடைந்தான் அங்கே நாடே விழாக் கோலம் கொண்டது. என்ன விடயம் என்று கேட்டான்.

""உனக்குத் தெரியாதா? அரசரின் பிறந்தநாள் விழாவை நாளை கொண்டாட இருக்கின்றார். வான வேடிக்கைகள், கலை நிகழ்ச்சிகள், போட்டிகள் எல்லாம் நடக்கும். ஏழைகளுக்கு அன்ன தானம் நடக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் அரண்மனை உபசரிப்பும் கொடுப்பார்கள்" என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ச் சட்டத்தரணிகளுக்கு ஓர் அவசர மடல்

எங்கள் தமிழ்ச் சட்டத்தரணிகளுக்கு அன்பு வணக்கம்.

இடையிடையே உங்களுக்குக் கடிதம் எழுதுகின்ற வழமை எம்மிடம் இருந்தாலும் கடந்த சில காலமாக அந்த வழமையையும் ஒத்திவைத்திருந்தோம்.

காரணம், எழுதப்படுகின்ற கடிதம் தொடர்பில் உங்கள் கவனம் அவ்வளவாக இருக்கவில்லை என்பதுதான்.

ஆம், ஒரு காலத்தில் தமிழர்களின் அரசியலில் சட்டத்தரணிகளின் வகிபாகம் காத்திரமாக இருந்தது. ஆனால் இப்போது ஊர்முழுவதும் சட்டத்தரணிகள் மலிந்துள்ளனராயினும் பொது விடயங்களில் கருசனை கொள்வதும் சமூகப் பார்வையும் அவர்களிடம் இல்லாமல் போய்விட்டது என்பதை இங்கு வெளிப்படையாகக் கூறித்தானாக வேண்டும்.

சமகாலத்தில் நம் தமிழ் மண் தாங்க முடியாத துன்ப துயரங்களை அனுபவித்து நிற்கிறது.

ஒருபுறம் போதைவஸ்து பாவனை மறுபுறம் கள்ளக்காணி விவகாரம் இதற்கும் மேலாக; நாள் தோறும் நடக்கும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள், களவு, கொள்ளை, சண்டித்தனக் கலாசாரம் என எங்கும் ஒரே பிரளயம்.

ஆனால் இந்தப் பிரளயத்தில் ஈடுபடுபவர்களும் ஈடுபடுத்தப்படுபவர்களும் சங்கமிக்கின்ற ஒரே இடம் நீதிமன்றங்கள்.

அங்கு அவர்களுக்காக வாதப்பிரதிவாதம் செய்வது உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

என்ன செய்வது குற்றம் செய்தவரைக் காப்பாற்றுவதற்காகவும் வாதம் புரிவது சட்டத்தரணிகளின் தொழிலாயிற்று.

எனினும் இங்கு தொழில் என்பதும் தொழில் தர்மம் என்பதும் வேறுபட்டவை என்பது நம் சிற்றறிவின் சிந்தனை.

பரவாயில்லை. மேற்படி விபரங்களை விவாதிப்பது இக்கடிதத்தின் நோக்கமல்ல. மாறாக, எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் புகையிரத விபத்தால் ஏற்படுகின்ற உயிரிழப்புகள் தொடர்பில் நீங்கள் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தால் என்ன? என்ற கோரிக்கையை முன்வைப்பதுதான் இக்கடிதத்தின் நோக்கம்.

இலங்கைப் புகையிரதத் திணைக்களம் தமிழர் பிரதேசத்தில் அதிலும் குறிப்பாக வடபுலத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறது.

புகையிரதக் கடவைகள் அமைக்கப்படாமை, பாதுகாப்புக் கடவைகளில் காப்பாளர்கள் நியமிக்கப்படாமை,

புகையிரதம் வருவதை வெளிப்படுத்தும் சமிக்ஞை விளக்குகள் மற்றும் எச்சரிக்கை மணிகள் பொருத்தப்படாமை பொருத்தப்பட்டவை பழுதடைந்துள்ள போதிலும் அவை சீரமைக்கப்படாமை என ஏகப்பட்ட அநியாயத்தை இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செய்கிறது.

இதற்கு வடபகுதியிலுள்ள பொறுப்பான புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்களும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், நேற்று முன்தினம் கூட (14) இணுவில் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவரும் அவரது ஆறு மாதக் குழந்தையும் புகையிரத விபத்தில் பலியாகிப் போன துயரம் நீங்கள் அறிந்ததே.

இந்த விபத்தை விபத்தாகப் பார்த்துவிட்டுச் செல்லாதீர்கள். இனியேனும் இந்த விபத்தை முடிவுக்குக் கொண்டுவர புகையிரதத் திணைக்களத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுங்கள்.

இதை நீங்கள் செய்வீர்களாயின் எதிர்காலத்திலேனும் எத்தனையோ அருமந்த உயிர்களைக் காப்பாற்றுகின்ற புண்ணியம் உங்களுடையதாக இருக்கும்.

# எரிபொருள் விநியோகம் தொடர்பான 13 இலட்சம் தரவுகள் அழிப்பு

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய முனைய நிறுவனத்தின் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புடைய 13 இலட்சம் தகவல்கள் (தரவுகள்) பிரதான தரவுக் கட்டமைப்பிலிருந்து அல்லது SAP தளத்திலிருந்து அழிக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டிலிருந்து தரவு அழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமது எக்ஸ் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடி நிலவிய 2022 ஆம் ஆண்டிலேயே பெருமளவான தரவு அழிப்பு செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

KPMG நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், அமைச்சர் இந்த விடயங்களை வெளிக் கொணர்ந்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை, எதிர்வரும் வாரம் KPMG நிறுவனத்தால் வழங்கப்பட்ட பின்னர், அதனை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த அறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். (ம-7)

# வட்டுக்கோட்டையில் முச்சக்கரவண்டி விபத்து

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று காலை இரண்டு முச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இதன்போது இருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவுவண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதிக வேகம் காரணமாக இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# இலங்கையில் குறைந்து வரும் பிறப்பு விகிதம்

(கொழும்பு)

நாட்டில் திருமண வீதமும் பிறப்பு வீதமும் படிப்படியாகக் குறைந்து வருவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமீபத்திய கணக்கெடுப்பின் தரவுகளை அறிவித்த பேராசிரியர், புதிதாகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் குறைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் உள்ள பெண்களுக்கு திருமணம் செய்து கொள்வதற்கு தகுதியான ஆண் ஒருவரை தேடுவது கடினம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் இளைஞர் சனத்தொகையில் கணிசமான குறைவைக் காண முடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியர் மேலும் சுட்டிகாட்டியுள்ளார். (ம-7)

# சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி நிதி மோசடி

## கம்பஹாவில் இருவர் கைது

(கம்பஹா)

கம்பஹாவில் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணினி குற்றப்பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பல்வேறு தரப்பினரிடம் இவ்வாறு நிதிமோசடியில் ஈடுபட்டதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் கம்பஹா - வேபட பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்த தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், தொலைபேசி என்பன குற்றவியல் விசாரணை திணைக்களத்தினரால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது. (ம-7)

# மாணவிகளுக்கு அழுத்தம்

## சந்தேகத்தில் ஆசிரியர் கைது

ஹட்டனில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவிகள் மூவருக்கு பாலியல் அழுத்தம் விடுத்த குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவிகள் மூவரிடமும் பாலியல் ரீதியான சீண்டலில் ஈடுபட்டதாக கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைவாக, குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - டென்மூர் தோட்டத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிணை காலப்பகுதியில் விசாரணைகளுக்கு இடையூறை ஏற்படுத்தக் கூடாதென நீதவானால் எச்சரிக்கப்பட்டு, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அடுத்த கட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம -7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை யாழ். பிரதேசத்தில்** பலாலி விமானப்படை, விமான நிலையம் பலாலி, பல்லி, இராணுவ முகாம், மயிலிட்டி 515 படைப்பிரிவு ,ராணுவ முகாம், மயிலிட்டி ,ராணுவ முகாம், மயிலிட்டி மீன்பிடி துறைமுகம், பலாலி விமானப்படை தங்கு விடுதி, விமான நிலைய சந்தி, பலாலி, மயிலிட்டி பம்ப் ஹவுஸ், மயிலிட்டி வி.சி. டச்சு வீதி, சாந்தை சந்தி, ஒட்டகப்புலம், தையிட்டி சந்தி, வள்ளுவர்புலம் மயிலிட்டி, வசாவிளான் விளான், சங்கானை வைத்தியசாலை, தொட்டிலடி, வல்லை வீதி சங்கானை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 653 படைப்பிரிவு , ராணுவ முகாம் -ஆலங்குளம், ஆலங்குளம், ராணுவம் முகாம், பிள்ளையார் அரிசி ஆலை, ஆலங்குளம் Maga, ஆலங்குளம், அனிஞ்சியங்குளம், பாரதிநகர், மல்லாவி, மல்லாவி பொலிஸ் நிலையத்தடி, மாங்காய் குடியிருப்பு - மல்லாவி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை - மல்லாவி, தென்னியங்குளம், தென்னியங்குளம் தேவாலயத்தடி, தேராங்கண்டல், திருநகர், துணுக்காய், உயிலங்குளம், வேட்டை அடைப்பு, யோகபுரம் கிழக்கு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** யு.என்.எச்.சி.ஆர் குருமங்காடு, அரசன் அரிசி ஆலை, வைரவபுளியங்குளம், ஆதிவிநாயகர் கோவிலடி, குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, குருமங்காடு, குருமங்காடு கோவில் வீதி, பண்டாரிக்குளம் சந்தி, புகையிரத நிலைய வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



03

போலி மொழிக்கொள்கை என்பது போலச் செய்தல் காரணமாகச் சொற்கள் தோன்றியிருக்கலாம் என இக் கொள்கையாளர்கள் கருதுவர். 'காகா' எனக் கரையும் பறவை "காக்கா" என்று தமிழில் அழைக்கப்படுவதையும் "குக்கூ" எனக் கூவும் பறவையை "குக்கூ" என ஆங்கிலத்தில் வழங்கப்படுவதையும் இதற்குச் சான்றாக குறிப்பிடுவர்.

மனிதனானவன் உணர்ச்சி மிக்க உயிரினம். அவன் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு வகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறான். ஒவ்வொரு வகையான உணர்ச்சிக்கும் ஏற்ப வெவ்வெறு வகையான ஒலிகளை அவன் எழுப்புகிறான். அச்சம், மகிழ்ச்சி, வியப்பு முதலிய உணர்ச்சிகள் வரும் போது தங்கள் வாயினின்று தாமாகவே ஒலி எழுகின்றன. ஒலியிலிருந்து மொழி தோன்றுகிறது என்கிறார்கள்.

இத்தகைய ஒலிகளிலிருந்தே மொழியின் தொடக்கம் அமைந்தது என்பது வியப்புக் குறிக்கொள்கை அல்லது உணர்ச்சிக் கொள்கை என்பர். பண்பு மொழிக்கொள்கை என்பது உலகின்உள்ள ஒவ்வொரு பொருளும்ஒவ்வொரு வகையான பண்போடு காணப்படுகின்றன. அதுபோல ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு வகையான ஓசையை பெற்றுள்ளன.

பாமரன் தன் களைப்பும் தன் வேலை செய்யும் அலுப்பும் தெரியாமல் இருப்பதற்கு ஒருவித ஓசையை எழுப்பினான். குழுவாக உடல் உழைப்பில் ஈடுபடுவோர் தாம் ஈடுபடும் தொழிலுக்கேற்ப சில ஒலிகளை எழுப்புவதுண்டு. ஏலேலோ, ஐலசா போன்ற சொற்களைப் படகினை செலுத்துவோர் எழுப்புகின்றனர். இது போன்றே நீர் இறைப்பவரும் நெல்குத்தும் மகளிரும் தனித்தனி வகையான ஒலித் தொடர்புகளைப் பயன்படுத்துவர். இவ்வாறு தொழில் செய்யும் போது எழுப்பப்படும் ஒலியாதலால் இதனை தொழில் ஒலிக் கொள்கை என்று கூறுகின்றனர். அதுவே தற்காலத்தில் இசைக்கு வழிவகுத்தது என்பர்.

மனிதப் பேச்சுக்கு முந்தியது பாட்டாகும். மகிழ்ச்சியான வேளைகளில் மனிதர்களுக் குப் பாட்டு தொடக்கத்தில் அது பொருளற்ற குரலிசையாக வெளிப்பட்ட போதிலும் பின்னர் பொருளுணர்த்தும் சொற்களாகப் படிப்படியாக மாறின என்பது இன்பப்பாட்டு மொழிக் கொள்கையாகும். மொழி அறிவு மூளையின் செய்ற்பாட்டோடு தொடர்புடையது.

மனித மூளை யானது படைப்பிலேயே மொழியைக் கற்றுக் கொள்ளும் இயல்பூக்கம் அமைந்திருப்பதையும் அதனாலேயே குழந்தைகள் தாம் வாழும் சூழலிலிருந்து மொழியைக் கற்றுக் கொள்கி றார்கள் என்றும் அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

### மொழி எழுத்துருவாக்கம்

மொழி எழுத்துருவாக்கம் என்பது எழுத்து வழக்கில்லாத மொழிகளுக்கு வரி வடிவம் வழங்குதலும் வரிவடிவம் உள்ள மொழியில் செயற்பாட்டுத் திறன் கருதி எழுத்துச் சீர்திருத்தம் செய்தலும் அடங்கும். ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சியின அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது எழுத்துச் சீர்திருத்த வரலாறு காட்டும் பாடம். எழுத்தாணி, ஓலைச்சுவடியிலிருந்து தாள், எழுதுகோல் என்று ஏற்பட்ட மாற்றமும் அச்சுத் தொழில்நுட்பமும் தட்டச்சு தொழில்நுட்பமும் கணனிக்கான விசைப் பலகைச் சீரமைப்பும் எழுத்து நிலையில் தமிழின் பயன்பாட்டு வளர்ச்சியைக் காட்டுகின்றன. இதுபற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்

### மொழி புதுமையாக்கம்

மொழி புதுமையாக்கம் என்பது மொழியை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்த மொழிகளுக்கு இணையாக மாற்றுவதாகும். புதிய துறைகளில் சிறப்பாகவும் செம்மையாகவும் பயன்படுத்தத் தேவையான கலைச் சொற்கள், நடை அமைப்புகள் ஆகியவற்றை உருவாக்குதலும் புதுமையாக்கமாகும்.

தமிழை இதற்கு முன்னர் பயன்படுத்தாத துறைகளில் பயன்படுத்தும் பொழுது புதுமையாக்கம் நிகழ்ந்து ஆட்சி, சட்டம், அறிவியல் போன்ற துறைகளில் ஏராளமான கலைச் சொற்களும் வாக்கிய அமைப்புகளும் தமிழில் உருவாக்கப்பட்டன. இக்கலைச் சொற்கள் உருவாக்கத்திற்கு நமது இலக்கியவளம், பேச்சு வழக்கின் அரிய சொற்கள் ஆகியன பெரிதும் உதவுகின்றன.

### மொழி நிலைபேறாக்கம்

மொழி நிலைபேறாக்கம்என்பது தரமான மொழிஉருவாக்கத்தையும் எழுத்து, சொற்களஞ்சியங்கள் முதலியவற்றில் நிலைபேறாக்கம் செய்தலையும் குறிக்கும். மொழி பயன்பாட்டில் புதிய கருத்துக்களுக்காக உருவாக்கப்படும் கலைச்சொற்கள் தேவைக்கேற்ப பல்வேறு அமைப்புகளினால் பல்வேறு வகையாக உருவாக்கப்படுகின்றன. இத்தகைய கலைச்சொற்களின் பயன்பாட்டில் சீர்மையில்லாமல் இருப்பின் கருத்துப் பரிமாற்றத்தில் குழப்பங்கள் தோன்றலாம். எனவே அரசோ, அரசு அமைப்புகளோ நிலைபேறாக்கம் செய்தல் வேண்டும். அதாவது அகராதி போன்ற வெளியீடுகள் செய்யப்பட வேண்டும்.

### ஒரு மொழியின் மாட்சியையும் வீழ்ச்சியையும் அளவிட முடியுமா?

ஒரு மொழியின் மாட்சியையும் வீழ்ச்சியையும் அளவிட முடியுமா? ஒரு மொழியின் வளர்ச்சி எந்தப் பாதையில் செல்கிறது? வளர்ச்சியை நோக்கியா அல்லது அழிவை நோக்கியா? இதனை எப்படித் தெரிந்து கொள்வது?

உலகில் உள்ள 7,105 வாழும் மொழிகளில் (புழக்கத்தில் உள்ள மொழிகளில்),

- 10% மொழிகள் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் மேன்மையான முறையில் பயன்பாட்டில் உள்ளன.
- 22% மொழிகள் பயன்பாட்டில் இருப்பதுடன் அவை தொடர்ந்து வளர்ச்சியை நோக்கியும் செல்கின்றன.
- 35% மொழிகள் நல்ல பயன்பாட்டில் இருக்கின்றன. ஆனால் அவற்றின் வளர்ச்சி நிலை தேக்கமடைந்துள்ளது.
- 21% மொழிகள் பேசுபவர்களின் எண்ணிக்கை குறைவதால் மறையக்கூடிய ஆபத்தில் இருக்கின்றன, ஆனால் சந்ததிகளை உருவாக்கும் திறனுடைய இளைய தலைமுறையினரால் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன.
- 13% மொழிகள் அழியும் ஆபத்தான நிலையில் இருக்கின்றன, இதனை பயன்படுத்துவோர் முதியோர்கள் மட்டுமே. ஆனால் சந்ததிகளை உருவாக்கும் திறனுடைய இளைய தலைமுறையினரால் இவை பயன்படுத்தப்படுவதில்லை. அதனால் இம்மொழிகளின் எதிர்காலம் கேள்விக்குரிய நிலையில் இருக்கிறது.

இந்த 7105 உலக வாழும் மொழிகளில், அமெரிக்க நாடுகளில் 1060, ஆபிரிக்கா நாடுகளில் 2146, ஐரோப்பிய நாடுகளில் 284, ஆசிய நாடுகளில் 2304, அவுஸ்திரேலிய/பசுபிக் நாடுகளில் 1311 மொழிகளும் பயன்பாட்டில் உள்ளன.

வாழும் மொழிகள் அதிக எண்ணிக்கையில் ஆசியாவிலும் எண்ணிக்கையில் குறைவாக ஐரோப்பிய நாடுகளிலும் உள்ளன. அத்துடன் அதிக மொழிகள் அழியக் கூடிய ஆபத்தில் இருப்பது அமெரிக்க நாடுகளில்.

வாழும் மொழிகளில் பல நல்ல பயன்பாடில் இருப்பது ஆபிரிக்க, ஆசிய மற்றும் அவுஸ்திரேலிய/பசுபிக் பகுதியில் உள்ள நாடுகளில். ஐரோப்பிய நாடுகளில் மொழிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பல மொழிகள் நல்ல மேன்மையான நிலையில் பயன்பாட்டில் உள்ளன.

இது போன்ற மொழிகளைப் பற்றிய புள்ளி விபரங்களைத் தருவது 'எத்னலாக்' இணையத்தளமாகும். எத்னலாக் என்பது ஒரு விரிவான மொழி அட்டவணை ஆகும். உலகளவில் மொழியியல் வல்லுநர்களுக்கும் மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இது ஒருஇன்றியமையாத பட்டியல் ஆகும். தற்பொழுது வெளிவந்துள்ள இப்புதிய பதிப்பின்படி 1950 ஆம் ஆண்டு வழக்கில் இருந்த மொழிகளில் 375 மொழிகள் மறை ந்து விட்டன என்பது தெரியவருகிறது.

உலக மொழிகளில் பல ஒரு குறிப்பிட்ட மொழியினங்களில் அடங்குகின்றன. அவற்றில் திராவிட மொழியினம், ஆரிய மொழியினம், முண்டாமொழியினம் என்பவை இந்தியாவில் உள்ளன. கிரேக்கம், இலத்தீன், ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், வெல்ஷ் ஆகிய ஐரோப்பிய மொழிகள் ஆரிய மொழியினத்தைச் சார்ந்தன.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு, பிராகுவி ோன்ற மொழிகள் திராவிட மொழியினத்தைச் சார்ந்தவை. தமிழம் என்னும் பெயரே திராவிடம் எனத் திரிந்தது என்பார் மொழி அறிஞர் பாவாணர். சீனமொழி, திபேத்தியமொழி, பர்மியமொழி, சயாம் மொழி ஆகியவை ஓரினத்தைச் சேர்ந்தவை ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்மாநாட்டில்வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விலை குறைப்பு நேற்று முதல் அமுலுக்கு வருவதாகத் தெரிவித்த அவர், 08 வகையான பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

விலை குறைக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் வெளியாகியுள்ளது

சிவப்பு கௌபி - 1095 ரூபாய், வெள்ளை கௌபி -1200 ரூபாய், சிவப்பு வெங்காயம் - 325 ரூபாய், முந்திரி - 1300 ரூபாய், ரின் மீன் (இறக்குமதி செய்யப்பட்டது) 425 கிராம் 575 ரூபாய், காய்ந்த மிளகாய் -1210 ரூபாய், வெங்காயம் - 365 ரூபாய், வெள்ளைச் சீனி - 275 ரூபாய், உருளைக்கிழங்கு - 299 ரூபாய், சிவப்பு அரிசி -174 ரூபாய், ரின் மீன் (இறக்குமதி செய்யப்பட்டது) 155 கிராம் - 290 ரூபாய், பாஸ்மதி அரிசி (பிரீமியம்) 760 ரூபாய். (ம-7)

## தேர்தலை...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் இந்தவருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் கட்சி என்ற ரீதியில் அதற்கு தயாராக வேண்டும். ஆனால் ஒரு சிலர் தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை. பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாம் ஒரு வேட்பாளரை முன்னிலைப்படுத்துவோம்.

கட்சி என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம் எனத் தெரிவித்த நாமல், வேட்பாளரை தெரிவு செய்வது மற்றும் கூட்டணி அமைப்பது தொடர்பாகவும் நாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருவதாகவும் கூறினார். (ம-7)

## தமிழரசுக்...

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும், யாழ்ப்பாணம், திருகோணமலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, இடைக்காலக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் கட்சியின் தலைவர்கள் கேட்டுக் கொண்டால் அவர்களுக்காக நீதிமன்றங்களில் முன்னிலையாகி அந்த வழக்குகளுக்கு எதிராக வாதாடுவேன்."

"இந்த வழக்குகள், கட்டளைகள் குறித்து நேற்றுக் காலையிலேயே கொழும்பில் கேள்விப்பட்டேன். திருகோணமலை வழக்கில் என் பெயரும் எதிராளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக இப்போது அறிந்துள்ளேன்.

ஏனைய எதிராளிகளான எமது கட்சியின் சகாக்கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக்காகவும் இந்த வழக்கில் முன்னிலையாகி கட்சிக்காக வாதாடுவேன்" என்றார். (ம-7)

## தர்மத்தின்...

பதிவிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகப் பக்கத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடத்த இடைக்கால தடை விதித்து திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டிற்கு யாழ்ப்பாண நீதிமன்றமும் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே "தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தர்மமே மறுபடியும் வெல்லும்" என சிறீதரன் பதிவிட்டுள்ளார். (ம-7)

## மக்களின்...

பதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் ரீதியாக பிரிந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும், அரசாங்கத்திற்காகவோ எதிர்க்கட்சிக்காகவோ அல்லாது நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கு அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மீண்டும் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, அநுராதபுரம்.வடக்கு நீர் வழங்கல் திட்டத்தினால் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கும் குடிநீர் தேவைக்கும் தீர்வு கிடைக்கும் எனவும் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் இந்த திட்டத்தினால் விவசாயத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என தான் உறுதியளிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். (ம-7)

## பாதுகாப்பான...

யுறுத்தி நேற்று புகையிரதத்தை மறித்து போராட்டமொன்றை பொதுமக்கள் முன்னெடுத்தனர்.

குறித்த புகையிரத கடவையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை என தெரிவித்தும் கடவை காப்பாளர் அவ்விடத்தில் தமது கடமையை செய்யவில்லை என குறிப்பிட்டும் பிரதேச மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

6.45 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற புகையிரதத்தை மறித்து போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பலத்த கோஷம் எழுப்பி பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது இறந்த உயிரே இறுதியாகட்டும், எங்கள் உயிரை காவு கொள்ளாதே!, தினம் தினம் பயந்த பயணமா? ஆகிய கோஷங்கள் தாங்கிய பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டன.

பொதுமக்கள், கிராம மட்டத்தை சேர்ந்தவர்கள் என பலரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் கோரிக்கையினையடுத்து போராட்டம் குறிப்பிட்ட நேரத்தில் கைவிடப்பட்டது.

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் புகையிரதத்துடன் மோதி வானொன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண்ணொருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## 29 வரை ஹெகலிய விளக்கமறியலில்

தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி விவகாரம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்னாள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 5 பேரை எதிர்வரும் பெப்ரவரி 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## ஐஸ்கிறீமுக்குள்...

னால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செல்லவச்சந்நிதி முருகன் கோவில், சூழலில் உள்ள குளிர்களி விற்பனை நிலையம் ஒன்றில், நேற்று முன்தினம் ஒருவர் குளிர்களி ஒன்றினை வாங்கிய வேளை அதனுள் தவளை ஒன்று காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை, அடுத்து உத்தியோகஸ்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)


லக்கி 7 VIP
திகதி 2024.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 0217
P 9 1 6 3 0 2 P

தன நிதானய
திகதி - 2024.02.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1421
W 02 36 37 69 W
16940

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3633
சீட்டிழுப்பு திகதி 15.02.2024
F 21 50 60 61
F 90320

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 0700
தனுசு 11 17 53 60 தனுசு
33007 28

மஹஜன சம்பத
திகதி 2024/02/15
சீட்டிழுப்பு இலக்கம் 5391
L 5 4 2 8 4 6

மெகா பவர்
திகதி 15/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1739
Y 08 08 09 31 45
92548

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
15.02.2024 வெற்றி வாரம் 099
A 7 3 0 0 5 5
29,104,300.00
DLB Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2365 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.15 தினம் வியாழக்கிழமை
15 34 46 69 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,797,745.60

சனிதா Shanida
திகதி 2024.02.15 வெற்றி வாரம் 4526 வர்ணம் சிவப்பு
02 11 59 69 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,116,224.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4077 வர்ணம் கரிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.15 தினம் வியாழக்கிழமை
24 38 43 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,659,846/-

கப்ருக
M 34 28 40 46 50
1541
15.02.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 506,283,446.20

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2191
சீட்டிழுப்பு திகதி : 2024.02.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.91,467,014.40
01 09 23 68 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)

(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு :

+447963743585(Whatsapp)

021 222 7141(Srilanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

(18948)



**நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.
(C-8360)


# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் இனந்தெரியாதோர் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையினுள் உட்புகுந்த இனம் தெரியாத சிலர் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு நேற்று மாலை மது போதையில் வந்த சிலர் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரைப் தலையில் பலமாக தாக்கினர்.

பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலுவலக ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதனை தடுக்க வந்தவர்களையும் தகாத வார்த்தைகளால் கடுமையாக மிரட்டினர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில்,

பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

# இலங்கை...

முன்னர் அறிவிக்க வேண்டும் என்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் யாப்பின் பிரகாரம், எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநாடு 21 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்படாததால், குறித்த மாநாட்டுக்கு தடை கோரியே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு மீதான அடுத்தகட்ட விசாரணைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இதேவேளை, திருகோணமலையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கும் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான வழக்கு நேற்று முற்பகல் திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாள்களுக்குச்செயற்படும் வகையில் மேற்குறித்த இடைக் காலக் கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கை திருகோணமலை சாம்பல் தீவு - கோணேசபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாகத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமாரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தரன் ஆகியோர் நேற்று முன்னிலையாகி வாதிட்டனர்.

கடந்த 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானவையும், செல்லுபடியற்றவையும் என வாதம் முன்வைக்கப்பட்டது.


எனவே, அந்த இரண்டு பொதுச் சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானவையும், செல்லுபடியற்றவை எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி இந்தத் தெரிவுகளின் போது வாக்களித்துள்ளமையால் குறித்த கூட்டம் சட்ட முரணானது எனவும் நேற்று நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சமர்ப்பணங்களின் அடிப்படையில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த கட்சியின் தேசிய மாநாட்டிற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இரு வாரங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது. அத்தோடு முன்னைய பொதுக் குழுக் கூட்டங்கள் இரண்டிலும் எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள் போன்றவற்றுக்கும் இதே தடைக்கட்டாணை வழங்கப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சண்முகம் குகதாசன், ப.சத்தியலிங்கம், சீ.யோகேஸ்வரன், சே.குலநாயகம் ஆகிய தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிராளிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
23.12.1932

மறைவு
18.01.2024

சோபகிருது ஆண்டு 18.01.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர்**

## மருதலிங்கம் அரிதாசன் M.A. HARI

(பிரபல ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

"ஹரிமஹால்"
இல. 26/5, கலட்டி முந்தல் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(19012)

இங்ஙனம்
குடும்பத்தினர்


**தேவை**

சட்டறிங் வேலைக்குரிய Shutter board பலகைகள் தீராந்திகள், தடிகள் உடன் தேவை.

075 164 0104
076 288 4366

(C-8361)



**காணி விற்பனைக்கு**

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 986 5457

(19133)



**தரம் 6 - O/L**

ஆங்கில, தமிழ் மொழி மூலம்

- குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடனான குழு வகுப்புகள்
- விரும்பிய பாடத் தெரிவு

NEWTON
Wyman Road, Nallur.
☎-077 792 3653

(18992)



**IELTS** Academic General UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

A1 IELTS Life Skills திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 Skilled Worker Visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்
17/2/2024-SAT
20/2/2024-MON
9 am or 3 pm

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-8359)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |



**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8362)



**மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்**

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503

(19118)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org